(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு சட்டமன்றத் தொகுதியில். திருக்கழுக்குன்றத்தில் ஓர் அரசு தாலுகா மருத்துவமனையும், நிரம்பூர், வள்ளிபுரம், கேளம்பாக்கம், செம்பாக்கம் மற்றும் திருப்போரூர் ஆகிய பகுதிகளில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும், மேலும் மாமல்லபுரம் மற்றும் மரக்காணம் ஆகிய பகுதிகளில் அரசு மருத்துவமனைகளும், செங்கற்பட்டு நகரில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் அமைந்துள்ளதாலும், போக்குவரத்து வசதி தேவைக்கேறப அமைந்துள்ளதாலும், திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் நடமாடும் மருத்துவ ஊர்தி வழங்குவது குறித்த அவசியம் எழவில்லை.

(முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வினா எண் 83, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

83—

மகளிர் சுய உதவிக் குழுக்கள்

***32822—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி ஊராட்சியில் கீழ்க்கண்டமங்கலத்திலுள்ள 15 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கூட்டம் நடத்துவதற்கு அரசு கட்டடம் கட்டித் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி ஊராட்சியில் கீழ்க்கண்டமங்கலத்தில் உள்ள 15 மகளிர் சுய உதவிக்

குழுக்கள் கூட்டம் நடத்துவதற்கு அரசு கட்டடம் கட்டித் தரும் எண்ணம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி இருக்கையில் இல்லை.

வினா எண் 84, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

84—

அகல இருப்புப் பாதைகள்

***39811—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள குறுகிய இருப்புப் பாதைகளை அகல இருப்புப் பாதைகளாக மாற்றுவதற்கும், புதிய அகல இருப்புப் பாதைகளை அமைக்கவும், போதிய நிதியை மத்திய அரசு ஒதுக்காததால் பணிகள் முடிவு பெறாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மத்திய அரசை நிதி ஒதுக்கீடு செய்ய தமிழக அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் தற்போது நிறைவேற்றப்படும் இரயில்வே திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு விவரங்கள் வருமாறு:—

புதிய அகல இரயில் பாதைத் திட்டங்கள் இரண்டு. ஒன்று, சேலம்-கரூர், திட்ட மதிப்பீடு ரூ.229.98 கோடி. இதிலே 2001 முதல் 2004 ஆம் ஆண்டு வரை மொத்தம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கின்ற தொகை ரூ.40.7 கோடி.

2. நாகப்பட்டினம்—வேளாங்கண்ணி, திட்ட மதிப்பீடு ரூ.16.93 கோடி. இதில் இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.12 கோடி.